கேள்வி கோரலுக்கான அழைப்பு

பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சு

நகர அபிவிருத்தி அதிகாரசபை

கண்டி, கற்றன்பேயிலான வீடமைப்பு செயல் திட்டத்திற்கான வரைபு, நிர்மாணிப்பு மற்றும் நிதியிடல்

1.0 நகர அபிவிருத்தி அதிகாரசபை (ந.அ.அ.ச) சார்பாக பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சின் நிலையான அமைச்சினால் நியமிக்கப்பட்ட தேடிவழங்கல் குழுவினது,தலைவரினால் கீழே குறிப்பிட்டவாறு வரைபிட்டு கட்டும் அடிப்படையில், கண்டி, கற்றன்பேயில் அமைந்துள்ள காணியில் தொடர்மாடியினை வரைபிட்டு, நிர்மாணித்து அத்துடன் நிதியிட்டு அத்துடன் ஏதாவது குறைபாடுகளை நிவர்த்தி செய்ய, தகுதியானதும் தகமைபெற்ற கேள்வி கோருநரிடமிருந்து இலாஞ்சனை இடப்பட்ட கேள்விகோரல் அழைக்கப்படுகின்றன.

- **செயல் திட்ட வாய்ப்பு:-**

(i) **வகை"அ'**- ஒவ்வொரு அலகும் **750 ச.அ.** தளப்பரப்பை அண்ணளவாக கொண்டிருத்தல் வேண்டும். (வீடமைப்பு அலகுகளின் மொத்த எண்ணிக்கையின் 20% அமைப்பு) 2 படுக்கையறைகள், 2 குளியலறைகள், சமையலறை, உணவறை, வாழ்வறை, களஞ்சிய அறை (கட்டாயமற்றது) மற்றும் உப்பரிகைகள்.

(ii) **வகை"ஆ'**- ஒவ்வொரு அலகும் **950 ச.அ.** தளப்பரப்பை அண்ணளவாக கொண்டிருத்தல் வேண்டும். (வீடமைப்பு அலகுகளின் மொத்த எண்ணிக்கையின் 50% அமைப்பு) 3படுக்கையறைகள்,2குளியலறைகள்,சமையலறை, உணவறை, வாழ்வறை, களஞ்சியஅறை (கட்டாயமற்றது) மற்றும் உப்பரிகைகள் .

(iii) **வகை"இ'**-ஒவ்வொரு அலகும் **1050 ச.அ.** தளப்பரப்பை அண்ணளவாக கொண்டிருத்தல் வேண்டும். (வீடமைப்பு அலகுகளின் மொத்த எண்ணிக்கையின் 30%அமைப்பு) 3படுக்கையறைகள், 3குளியலறைகள், சமையலறை,களஞ்சியஅறை(கட்டாயமற்றது) உணவறை, வாழ்வறை மற்றும் உப்பரிகைகள்.

2.0 **தேசிய போட்டியான கேள்விகோரல் நடவடிக்கை மூலம்** கேள்வி கோரல் நடாத்தப்படும்.

3.0 ஒப்பந்தம் அளிப்பதற்கான தகுதிக்கு, சித்தியடைந்த கேள்விகோருநர் கரும்பட்டியல் இடப்படாதவரும் அத்துடன், தகுந்த கேள்வி கோருநர்கள் பின்வரும் தகைமைகளின் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்:-

- உள்ளூர் அபிவிருத்தியாளர்கள் அல்லது ஒப்பந்ததாரர்கள், நிர்மாணிப்புக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (நி.கை.அ.அ.ச;CIDA) பதிவு செய்யப்பட்டு, மட்டம் CI அல்லது அதற்கு மேலான மட்டத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

- கேள்வி கோருநர் ஒரு அந்நிய கட்சிக்காரராயின், அவர்கள் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல் வேண்டும்:-

  - ஒவ்வொரு அந்நிய ஒப்பந்ததாரரும், இலங்கையில் இனங்கானப்பட்ட நிர்மாணிப்பு வேலையில் ஈடுபடும் முன், நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (நி.கை.அ.அ.ச:CIDA)தற்காலிக பதிவு பத்திரத்தை பெற்றவராக இருத்தல் வேண்டும்.
  - ஏதாவது இனங்காணப்பட்ட நிர்மாணிப்பு வேலையில் ஈடுபட, இலங்கை அரசுடன் ஒப்பந்தத்தில் நுழைந்துள்ள அந்நிய ஒப்பந்ததாரர்களுக்கு முன்குறிப்பிட்ட ஏற்பாட்டிலுள்ள கட்டளை விதி ஏற்புடையதற்றதாக இருக்கும்.

அல்லது

- மேற்குறிப்பிட்ட ஏதேனுமொரு தேவைப்பாடுகளில் ஒன்றையேனும் நிறைவேற்றாத கேள்விகோருநர், பிரேரிக்கப்பட்ட செயல் திட்டத்தினை கொண்டு நடாத்த தேவையான நிதி ஆற்றல் இருப்பின் கருத்தில் எடுத்துகொள்ளப்படுவர். இச்சந்தர்ப்பத்தில் அபிவிருத்தியாளர் / முதலீட்டாளர் நிர்மாணிப்புகைத்தொழில்அபிவிருத்தி அதிகாரசபை (நி.கை.அ.அ.ச.) இல் பதிவுசெய்யப்பட்டு,மட்டம் CI அல்லது அதற்கு மேல் உள்ள உள்ளூர் ஒப்பந்ததாரர்களுடன் கூட்டு முயற்சியாக நிர்மாணிப்பினை மேற்கொள்ளல் வேண்டும்.

அத்துடன்

- கடந்த 5 வருடகாலங்களில் நிர்மாணிப்பு வேலைகளில் வருடாந்த சராசரி புரள்வாக ஆகக்குறைந்தது இலங்கை ரூபாவில் 1.35பில்லியனை பெற்று இருத்தல் வேண்டும். கூட்டுமுயற்சியான ஒவ்வொரு பங்காளிகள் உட்பட கேள்விகோருநர்கள் நிதித்தகவலை அளித்தல் வேண்டும்.
- கடந்த ஐந்து வருடங்களில் குறைந்தது (நி+10) தளங்கள் கொண்ட ஒரு கட்டிடமாவது நிர்மாணித்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

- கோள்விகோருநர் ஆனவர் தொடக்க ஒப்பந்த விலையில் 50%இனை நிதியிடல் வேண்டும். இதனை நகரஅபிவிருத்தி அதிகாரசபையானது(ந.அ.அ.ச;UDA) செயல்திட்ட முடிபுறுத் தப்பட்டு கையளிக்கப்பட்ட 6 மாதங்களுள் மீளளிக்கும்.

4. ஒப்பந்த காலக்கட்டம்- **730 நாட்கள்**

5. அக்கறையான கேள்விகோருநர்கள் மேலும் விபரங்களை பத்தரமுல்லை ''செத்சிறிபாய'' இல் உள்ளந.அ.அ.ச, 6வது மாடியில் உள்ள பணிப்பாளர் (நடுத்தர வருமான வீடமைப்புசெயல் திட்டம்) இனை தொ.பே. **இல 0112875907** இன் மூலம் அலுவலக வேலைநாட்களில் **மு.ப 9.00 இலிருந்து பி.ப 3.00 மணிவரை** தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

6. அக்கறையான கேள்விகோருநர்கள், முழுமையான தொகுதியான கேள்விகோருதலின் ஆங்கில ஆவணங்களை, மீளப்பெற முடியாத கட்டணமாக **ரூபா 20,000 +பெ.சே.வ(VAT)**பணத்தை; தலைவர், ந.அ.அ.ச. சார்பாக கொடுப்பனவு செய்து, எழுத்து மூலம் விண்ணப்பப்படிவத்தினை பணிப்பாளர் (மத்திய வருவாய் வீடமைப்பு செயல் திட்டம்), ந.அ.அ.ச, 6வது மாடி, ''செத்சிறிபாய'' பத்தரமுல்லையில் **23/10/2017 இலிருந்து 15/12/2017 வரை** அலுவலக நேரங்கள் **மு.ப.9.00 இலிருந்து பி.ப 3.00 மணிவரை** சமர்ப்பித்து கொள்வனவு செய்து கொள்ளலாம்.

7. கேள்வி கோருதலானது இருபடியாக்கலுடன் (DUPLICATE) **21/12/2017அன்றுபி.ப.2.00 மணிக்கோ** அல்லது அதற்கு முன்போ பின்வரும் விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். பிந்திய கேள்வி கோரல் நிராகரிக்கப்படும். மூடிய பின்பு, உடனே கேள்வி கோருதல்கள், நிகழ்வில் பங்குகொள்ள விரும்பும் கேள்வி கோருநர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

தலைவர்,
நிலையான அமைச்சரவை நியமித்த தேடிவழங்கல்குழு
பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சு
17வதுமாடி "சுஹுறுபாய"
ஸ்ரீ-சுபுத்திபுர வீதி

பத்தரமுல்லை.

8. கேள்வி கோரல்களானது **21/04/2018** வரை செல்லுபடியாகும்.

9. சகல கேள்விகோரல்களும் இலங்கை **ரூபா 30 மில்லியன்** கேள்விகோரல் பிணையுடன் கூடியதாக இருத்தல் வேண்டும் கேள்வி கோரல்பிணையானது இலங்கைமத்தியவங்கியினால் அங்கீகரி க்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது நிர்மாணிப்பு உத்தரவாத நிதியுடனானதொன்றாக இருத்தல் வேண்டும்.இது மாற்ற முடியாததும் அத்துடன் பணிகொள்வோரின் எழுத்து மூல முதல்

கோரிக்கைக்கு நிபந்தனையற்ற காசு பெறுதலுக்குரியதாகவும் இருத்தல் வேண்டும். கேள்வி கோரல் பிணையானது **19/05/2018** வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

10. கேள்வி கோரலுக்கு முன்பான கூட்டமானது ந.அ.அ.ச. மாகாண அலுவலகம், கண்டியில் **09/11/2017 இல் மு.ப. 11.30 மணியளவில்** நடாத்தப்படும்.

தலைவர்
நகர அபிவிருத்தி அதிகாரசபை
7வது மாடி "செத்சிறிபாய"
பத்தமுல்லை.